# 5

# முடிவெடுக்கும் வேளை

## (1 இராஜாக்கள் 18:1-40)

*1 இராஜாக்கள் புத்தகம் 18ம் அதிகாரமானது வேதாகமத்தில் உள்ளவற்றிலேயே மிகவும் மன எழுச்சியூட்டக்கூடிய அதிகாரங்களில் ஒன்றாகும். இது வண்ணமயமான பிரசங்கத் தலைப்புகளை ஏவக்கூடிய ஒரு அதிகாரமாக உள்ளது: "தேவர்களின் யுத்தம்," "கர்மேல் மலையில் காட்சி," "அக்கினி கொண்டு பதில் அளிக்கிற தேவன்." "இரு கருத்துக்களிடையே நொண்டி நடத்தல்" அல்லது "முடிவெடுக்கும் வேளை!" என்பதை நான் விரும்புகிறேன்.*

*இந்த மாபெரும் அதிகாரம், நேருக்கு நேராக மோதுதல்களின் வரிசை ஒன்றைச் சித்தரிக்கிறது. எலியா, ஒன்று அல்லது அதற்கு அதிகமான தனிநபர்களால் திரும்பத் திரும்ப நேருக்கு நேராக மோதப்படுகிறார்.*

### ஒரு தெய்வீக எதிர்கொள்ளுதல் (18:1, 2அ)

*முதலாவதாக நாம், தேவனுக்கும் எலியாவுக்கும் இடையிலான தெய்வீகத்தின் எதிர்கொள்ளுதல் ஒன்றைக் கொண்டுள்ளோம்:*

> *அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்" என்றார் (வசனம் 1).*

*"மூன்றாம் வருஷமாகையில்" என்பது அனேகமாக, எலியா சாறிபாத் ஊரில் இருந்த காலத்தைக் குறிக்கலாம்.[1] பஞ்சம் மூன்றரை ஆண்டுகள் நீடித்திருந்தது (லூக்கா 4:25; யாக்கோபு 5:17). பாகால் மழையை உண்டாக்க முடியாது என்பதை மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் கண்டிருந்தனர். தேவன் தம் மக்களைத் தம்மிடத்தில் திருப்பிக்கொள்வதற்கு இதுவே சரியான வேளை என்று முடிவுசெய்தார், எனவே மீண்டும் ஒருமுறை "கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகியது." தேவன் தமது திட்டத்தின் அடுத்த படிநிலைக்குத் தயாராக இருந்தார்.*

*வழக்கம்போலவே, தேவன் பேசுகையில் எலியா கீழ்ப்படிந்தார்: "அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப்போனான்" (வசனம் 2அ).*

### ஒரு அருளிரக்கமுள்ள எதிர்கொள்ளுதல் (18:2ஆ-16)

*எலியாவும் ஆகாபும் எவ்வாறு சந்தித்துக் கொண்டனர் என்பதைக் பக்க வரலாறு ஒன்று கூறுகிறது (வசனங்கள் 2ஆ-16). எலியாவுக்கும் கர்த்தரில் விசுவாசியாக இருந்த ஒபதியா என்பவருக்கும் இடையில் ஒரு எதிர்கொள்ளுதல் நடந்தது.*

*ஆகாப், தமது மிருகங்களுக்குப் புல்வெளியைக் கண்டறியும்படி தமது ஊழியனாகிய ஒபதியா என்பவரை அனுப்பினார். ஒபதியா அதைத் தேடிக்கொண்டிருக்கையில், அவர் எலியாவைச் சந்தித்தார். அவரிடத்தில் எலியா, "இதோ, எலியா வந்திருக்கிறான்" என்று அவரது எஜமானருக்குச் சொல் லும்படி கூறினார் (வசனம் 11). இது ஒபதியாவைப் பதற்றம் அடையச் செய்தது, ஏனெனில் எலியா திடீரென்று தோன்றவும் பின்பு விரைவாக மறையவும்கூடிய வழியைக் கொண்டிருந்தார். ஆகாப் வரும்போது எலியா மறைந்து விடுவார் மற்றும் ஆகாப் கோபத்தில் தம்மைக் கொன்றுவிடுவார் என்று ஒபதியா அஞ்சினார் (வசனங்கள் 9-12). இருப்பினும் எலியா, "இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன் என்று சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று அவருக்கு உறுதி யளித்தார் (வசனம் 15).*

## *ஒரு அரசத்துவ எதிர்கொள்ளுதல் (18:17-20)*

*இந்தச் சந்திப்பானது அரசத்துவ எதிர்கொள்ளுதல் ஒன்றிற்கு வழிநடத்தி யது: "அப்பொழுது ஒபதியா போய், ஆகாபைச் சந்தித்து அவனுக்கு அதை அறிவித்தவுடனே, ஆகாப் எலியாவைச் சந்திக்கப் போனான்" (வசனம் 16). மூன்றுக்கும் மேலான அந்த ஆண்டுகளில் முதன்முறையாக ஆகாபும் எலியாவும் முகமுகமாகச் சந்தித்தனர்.*

*இந்த எதிர்கொள்ளுதலை மதித்து உணருவதற்கு, 2ம் வசனத்தின் முடிவுப் பகுதிக்குத் திரும்பிச் செல்லுங்கள்: "பஞ்சமோவெனில் சமாரியாவிலே* கொடிதாயிருந்தது.*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) நாட்டில் விஷயங்கள் மோசமாகியிருந்தன. ஒரு சாபத்தை ஒன்றுமற்றதாக ஆக்குவதற்கு அந்த சாபத்தை இட்டவரை அழித்தல் ஒரு வழியாக இருந்தது என்று பழங்கால மக்கள் நம்பினர். ஆகவே அந்த ஆண்டுகளில் ஆகாப், எலியாவை எல்லா இடங்களிலும் தேடிக்கொண்டிருந்தார். எலியாவிடம் ஒபதியா "உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை" என்று கூறினார் (வசனம் 10). இப்பொழுது எலியா, ஆகாபைச் சந்திக்க இன்னும் ஒருமுறை திரும்பத் தோன்றினார்.*

*ஆகாப் குதிரையின்மேல் வீற்றிருப்பதைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். ஆகாபுக்கு முன்பாக அவர் மிகவும் வெறுத்த விரோதியான எலியா, தமது கால்களை அகற்றிக்கொண்டு தமது இரு கைகளையும் தமது இடுப்பில் வைத்துக்கொண்டு, தமது அழுக்கான உடைகளுடனும் பறட்டையான முடியுடனும் நிற்கிறார்! அவரை நோக்கி ஆகாப், தமது பற்களைக் கடித்துக்கொண்டு, "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா" என்கிறார் (வசனம் 17). வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "கருகிப்போன புல்வெளிகளையும் செத்துப்போன மரங்களையும், [இறந்த] மிருகங்களின் வெளிறிய எலும்புகளையும், பசியாக உள்ள மக்களின் கதறல்களையும் நீ காண்கிறாயா? இது அத்தனையும் உன் தவறுதான். நீ இந்த நாட்டில் கலக்கத்தை ஏற்படுத்திவிட்டாய்!" ஆகாப் தமது சொந்தப் பாவமே நாட்டில் பெருந்துன்பத்தைக் கொண்டுவந்திருந்தது என்று ஒப்புக்கொள்வதற்கு மாறாக, இஸ்ரவேலில் இருந்த துன்பங்கள் எல்லாவற்றிற்காகவும் அவர் எலியாவின்மீது குற்றம்சுமத்தினார்.*

அது தனிவகைப்பட்டதாக உள்ளது அல்லவா? ஏதேன் தோட்டத்தில் இருந்தே, மனிதர்கள் தங்கள் இடர்ப்பாடுகளுக்குப் பிறரைக் குற்றம் சுமத்தியுள்ளனர். மூர்க்கமான கோபத்தினால் ஜன்னல் கதவில் கைமுட்டியால் ஓங்கிக் குத்தி, தனது கை வெட்டப்பட்டதால் அதைப் பிடித்துக்கொண்டு, இரத்தம் வழியும் மணிக்கட்டுடன், "*நீ* என்னை என்ன செய்ய வைத்துவிட்டாய் என்று பார்!" என்று கூறிய ஒருவரின் மனைவிக்கு நான் ஆலோசனை கூறினேன்.

எலியா பயந்திருக்கவில்லை. அதற்குப்பதிலாக அவர் அந்தக் குற்றத்தை அதற்கு உரியவரிடமாகத் திரும்பினார்: "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் *நான்* அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் *நீரும்* உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்"[2] (வசனம் 18; என்னால் வலியுறுத்தப்படுகிறது). வேறு வார்த்தைகளில் சொல்வது என்றால், அவர் "இந்த கலக்கம் உமது சொந்தப் பாவத்தினாலேயே உம்மீது வந்துள்ளது" என்றார்.

ஒரு முக்கியமான கருத்தைக் கவனிப்பதற்குச் சற்றே நாம் தாமதிப்போமாக. அவ்வப்போது மக்கள், சபையில் வேதவசனரீதியல்லாத நடைமுறைகளை அறிமுகப்படுத்த முயற்சி செய்கின்றனர். மற்றவர்கள் மறுக்கும்போது, அந்தப் புதுமையை அறிமுகப்படுத்துபவர்கள், "நீங்கள் கலங்கச் செய்பவர்களாக மாத்திரமே இருக்கிறீர்கள்!" என்று கூறுகின்றனர்.[3] எலியா, "இல்லை! தேவனுடைய வழிகளைக் கைவிடுபவர்களே ஆவிக்குரிய இஸ்ரவேலைக் கலங்கச் செய்பவர்களாக உள்ளனர்!" என்று பதில் அளிப்பார்.

ஆகாபுக்கு எலியா, ''இப்போதும் கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பதுபேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும்" என்று அறிவுறுத்தினார் (வசனம் 19).

கர்மேல் மலை, மத்தியத் தரைக்கடற்கரையில், கலிலேயாக் கடலுக்கு மேற்கில் அமைந்துள்ளது.[4] பல காரணங்களுக்காக இந்த இடம் தேர்ந்துகொள்ளப்பட்டிருக்கலாம். இது பலரால் ஒரு பரிசுத்தமான இடம் என்று கருதப்பட்டிருந்தது. இது தேவனுக்குச் செய்யப்பட்ட உண்மையான ஆராதனைக்குப் பதிலாக விக்கிரக ஆராதனை இடம் பெற்றிருந்த "ஒரு உயரமான இடமாக" இருந்தது. இது எலியாவுக்கு தேவையாயிருந்த எல்லாவற்றையும் கொண்டிருந்த ஒரு வியூகத்துவ இடமாக இருந்தது.

இஸ்ரவேல் முழுவதும் தேவனைவிட்டுப் புறம்பே செல்வதில் ஈடுபட்டிருந்தபடியால், ஒவ்வொரு குடும்பத்தின் பிரதிநிதிகளும் அங்கு இருக்க வேண்டும் என்று எலியா விரும்பினார். விசேஷமாக கள்ளத் தீர்க்கதரிசிகள் அங்கிருக்க வேண்டும் என்று எலியா விரும்பினார்: பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர்களும், பாகாலுக்குச் சரியான பெண்வடிவமான ஆசேராவின் தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் 400 பேர்களும். இந்தப் பிந்திய குழுவினர், "யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற" அனேகமாக ஆண்கள் மற்றும் பெண்களாக இருக்கலாம். அவர்கள் அவளுடைய தனிப்பட்ட பாதுகாப்பில் இருந்தனர்.

"அப்படியே ஆகாப்: இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத்திலும் ஆட்களை

அனுப்பி, கர்மேல் பர்வதத்திலே அந்தத் தீர்க்கதரிசிகளைக் கூடிவரும்படி செய்தான்'' (வசனம் 20). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "தீர்க்கதரிசிகள்'' என்பவர்கள், பாகாலின் 450 தீர்க்கதரிசிகளாக இருந்தனர் (வர்னம் 22). ஆசேராவின் 400 தீர்க்கதரிசிகள் அந்தக் காட்சிக்கு வந்திருக்கவில்லை. அவர்கள் அங்கு வருவதற்கு யேசபேல் அனுமதித்து இருக்க மாட்டாள் என்பது சாத்திய மாகும்; அவர்கள் மீது ஆகாப் அனேகமாகக் கட்டுப்பாடு எதுவும் கொண்டிருக்க மாட்டார்.

எலியா ஆகாபுக்குக் கூறியதை அவர் [ஆகாப்] ஏன் செய்தார்? அவர் பல காரணங்களைக் கொண்டிருக்கலாம். ஒருவேளை அவர் பஞ்சத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக எதை வேண்டுமானாலும் முயற்சித்துப் பார்க்க மனவிருப்பம் உள்ளவராக இருந்திருக்கலாம். ஒருவேளை அவர், தம்மால் செய்ய இயலாததை, பாகலின் 450 தீர்க்கதரிசிகள் செய்ய முடியும் என்று நினைத்தி ருக்கலாம்: அது, எலியாவை அழித்தல் என்ற செயலேயாகும். அனேகமாக இது தீர்க்கதரிசியின் வல்லமைநிறைந்த செல்வாக்கிற்கு ஒரு பாராட்டாக மாத்திரம் இருக்கலாம்.

## ஒரு தனிப்பட்ட எதிர்கொள்ளுதல் (18:21-24)

21ம் வசனத்தில் தொடங்குகிறதான, கர்மேல் மலையின் காட்சியை நாம் கவனிப்போமாக.

ஒருபக்கத்தில் பாகாலின் 450 தீர்க்கதரிசிகளும் அவர்களின் துணையாளர்களும் இருந்தனர். "450'' என்று கூறுதலானது மனதை மிகவும் ஈர்ப்பதாக ஒலித்திராது இருக்கலாம், ஆனால் அதை நமது சபைக்குழுமத்தின் அளவுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.[5] அது ஓரளவு பெரிய அளவான எண்ணிக்கையாக உள்ளது! இப்போது இந்த 450 பேர்களும், நன்கு கொழுத்த, நீளமான தலைமுடியுள்ள, தீருவின் விலை உயர்ந்த மற்றும் தங்கச் சரிகை இழைப்புக்கொண்ட உடைகளை உடுத்தியவர்களாக இருந்தனர். ஒவ்வொருவருடைய மார்பிலும் பாகாலின் அரியணை என்று அவர்கள் நம்பியிருந்ததான, சூரியனைப் பிரதிபலிக்கச் செய்யும் பளபளப்பான உலோகத் தகடு இருந்தது. அருகில் அரசர் தம்முடைய கூட்டத்தாருடன் இருந்தார்.

இது *ஆயுதம்* தரித்த ஒரு முகாமாக இருந்தது என்பதைக் கவனியுங்கள். அந்த நாள் முடியும் முன்பு பாகாலின் தீர்க்கதரிசிகள் கத்திகள் மற்றும் ஈட்டிகள் கொண்டு இரத்தம் வடியுமட்டும் தங்களை கீறிக்கொள்வார்கள்! (வசனம் 28).

இஸ்ரவேல் மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர்: அவர்கள் மக்களில் முக்கியமானவர்கள், தலைவர்கள் அத்துடன் கூடுதலாக மற்றபலரும் ஆவர். (பாரம்பரியப்படியான அந்த இடத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது என்று காணமுடியும்படி ஆயிரக்கணக்கானவர்கள் கூடுவதற்குப் போதுமான அளவுக்குப் பெரிய இடம் கீழே இருக்கிறது.) அது பசியுடன் கண்ணோக்கிய ஒரு குழுவாக இருந்திருக்க வேண்டும். அவர்களில் பலர், அந்த மூன்றரை ஆண்டுகள் பஞ்சத்திற்குப் பின்பு மிகவும் இளைத்து மெலிந்து போயிருப்பார்கள் என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன்.

மறுபுறத்தில், எலியா என்ற ஒரே மனிதர் தன்னந்தனியாக இருந்தார், இவர் யெகோவாவுக்குத் தோராயமாகச் செதுக்கப்பட்ட செய்தியாளராக இருந்தார். இருப்பினும் எலியாவின் நிலைகுறித்து நீங்கள் வருத்த உணர்வு

கொள்ள வேண்டாம். அவர் இஸ்ரவேலில் *தேவனுடைய* மனிதராக, *தேவனு டைய* பணியைச் செய்பவராக, *தேவனுடைய* ஊழியத்தில் இருந்தார். போட்டிநிலைகள், 450க்கு 1, அல்லது 1000க்கு 1 என்று இருக்கவில்லை. மாறாக, போட்டிநிலைகள் 1000க்கு 1 *கூட்டல் தேவன்* என்பதாகவே இருந்தன. "*தேவன்* நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

எலியா கட்டுப்படுத்துகிறவராக இருந்தார். இந்த அதிகாரத்தில் எலியா பலமுறைகள் பேசினார். அவர் பேசிய ஒவ்வொரு முறையும், அது அதி காரத்துவமுள்ளதாக இருந்தது; வழக்கமாக அது ஒரு கட்டளையாக இருந்தது. அவர் ஒபதியாவுக்கு, "நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று ஆகாபுக்குச் சொல்" என்று கட்டளையிட்டார். அவர் ஆகாபுக்கு, "கர்மேல் பர்வதத்திலே எல்லாரையும் ஒன்று கூட்டு" என்று கட்டளையிட்டார். பிற்பாடு அவர் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு, "ஒரு காளையை பலிமேடையின் மீது வையுங்கள்" என்று கட்டளையிட்டார். அவர் மக்களுக்குக் கட்டளையிட்டார், பின்பு மீண்டும் அரசருக்குக் கட்டளையிட்டார். எலியா கட்டுப்படுத்துகிறவராக இருந்தார்.

இல்லத்தில், பணிநிலையில், அல்லது பள்ளியில் நீங்கள் தேவனுக்காகத் தனிமையில் நின்றால், இந்த வரலாற்றில் இருந்து தைரியம் பெறுங்கள். தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் நீங்கள் உறுதியாக நிற்பதாக அறிந்தால், உங்கள் சூழ்நிலையில் நீங்கள் கட்டுப்படுத்துகிறவராக இருக்க முடியும்.

எலியாவுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் தனிப்பட்ட எதிர்கொள்ளுதலை நாம் காணும்போது, இந்தக் காட்சியை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். கர்மேல் மலையில் எலியா பேசத் தொடங்குகையில், அவர் பாகாலின் தீர்க்கதரிசிகளிடத்திலோ அல்லது அரசரிடத்திலோ அல்ல ஆனால் மக்களிடத்திலேயே [முதலில்] பேசினார். பாகாலின் தீர்க்கதரிசிகள் நம்பிக்கைக்கு இடமற்ற வகையில் இருந்தனர்; அவர்களை மனம்மாற்ற எலியா முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. அவர் அரசர்மீது கடைசியில் செல் வாக்குச் செலுத்த விரும்பினார், ஆனால் அவர் முதலில் ஆகாபிடம் பேசவில்லை. அந்த வேளையில் - தேவனுடையவர்களாக இருந்தும், ஊசலாடும் உடன்பாடு செய்துகொள்ளும் தேவனுடைய மக்களே - அவரது அக்கறைக்கு உரியவர்களாக இருந்தனர்.

எலியா அவர்களிடத்தில், "நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார் (வசனம் 21அ). "குந்திக்குந்தி நடப்பீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது, ஊனமுற்று இருத்தலைக் குறிக்கிறது. RSV வேதாகமத்தில் "நீங்கள் எதுவரைக்கும் இரண்டு நினைவுகளுக்கு இடையில் நொண்டிக்கொண்டிருப்பீர்கள்?" என்றுள்ளது. பிறப்பிலேயோ அல்லது ஒரு விபத்தினாலேயோ, ஒருகால் இன்னொரு காலைவிடச் சிறிதான நிலையில் ஊனமுற்ற ஒருவரைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். இவ்விடத்தில் அவர் பயன்படுத்தியுள்ள ஒப்புவமையில், ஒரு காலானது யெகோவாவுக்குச் செய்யும் ஆராதனையைக் குறிக்கிறது; இன்னொரு காலானது பாகாலுக்குச் செய்யும்

ஆராதனையைக் குறிக்கிறது. அவைகள் ஒன்றுக்கொன்று பொருந்துவதில்லை! எலியா, "நீங்கள் எதைத் தேர்ந்துகொள்வீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். இது முடிவெடுக்கும் வேளையாக உள்ளது! நீங்கள் எவ்வழியில் செல்வீர்கள் என்பதை முடிவுசெய்ய வேண்டும்!" என்று கூறுகிறார்.

நமது நாட்களின் மதச்சூழ்நிலையில் - ஒருசிறிது கிறிஸ்தவம், ஒரு சிறிது கிழக்கத்திய மதம், ஏராளமான மாயாவாதம் என்று - மதங்களை ஒன்று கலத்தல் என்பது பிரபலமாகி வருகிறது. "மதங்களின் கலவை," என்று அவர்கள் அழைக்கிற அப்படிப்பட்ட மதமானது பல மக்களுக்குப் பிரியமானதாக உள்ளது. இருப்பினும் தேவன் "ஒருக்காலும் கலவையான மதம் ஒன்றை ஏற்றுக் கொண்டதில்லை."[6] இஸ்ரவேல் மக்கள்,யெகோவாவுக்குச் செய்யும் ஆராதனையைப் பாகாலுக்குச் செய்யும் ஆராதனையுடன் ஒன்றுகலக்க முயற்சி செய்துகொண்டிருந்தனர், மற்றும் தேவனுடைய மனிதர், "அவ்வாறு இருக்க முடியாது! நீங்கள் ஒன்று அல்லது மற்றவழியில் செல்ல வேண்டும்! அது எந்த வழியாக இருக்கும் என்பதை உங்கள் சிந்தையில் தீர்மானம் செய்யுங்கள்!" என்று கூறினார்.

மனதைத் தூண்டும் இந்த அறைகூவலுக்குக் கூட்டத்தாரின் பதில் என்னவாக இருந்தது? "ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை" (வசனம் 21ஆ). அங்கிருந்தவர்களில் பலர், எலியா சரியாகவே கூறினார் என்பதை அறிய *வேண்டியதாயிருந்தது*; பாகாலியத்தையும் விக்கிரக ஆராதனையின் மற்ற எல்லா வடிவங்களையும் யெகோவா கண்டனம் பண்ணினார் என்பதை அவர்கள் அறிய வேண்டியதாயிருந்தது. அவர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொள்வதற்குத் தங்களால் எதுவும் கூற இயலாது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். மற்றொருபுறத்தில் அவர்கள் தங்களை யெகோவாவுக்கு ஒப்புவித்து விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்கவில்லை. அவர்கள் எண்ண முடிந்தது. ஒருபுறத்தில் ஒரு மனிதர் இருந்தார்; மறுபுறத்திலோ பாகாலின் 450 தீர்க்கதரிசிகளும் அவர்களுடன் கூடுதலாக அரசரும் அவரது எல்லாப் படைகளும் இருந்தன. இவ்வாறாக, அவர்கள் ஒன்றும் கூறாதிருந்தனர்.

இதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன்; ஒருவேளை நீங்களும்கூட இதை அடிக்கடி கண்டிருக்கலாம். யாரேனும் ஒருவருடன் நீங்கள் வேதாகமத்தை படித்துக்கொண்டிருக்கும்போது, தொடக்கத்தில் அவர் வசனப்பகுதிகளை உங்களுடன் கலந்துரையாடுகிறார், ஒருவேளை உங்களுடன் விவாதமும் செய்கிறார். நிறைவாக, அவர் என்ன செய்ய வேண்டும் என்று *அறிய* வேண்டிய வேளை வருகிறது; கொண்டுவரப்படக்கூடிய எந்த மறுப்பிற்கும் வேதவசனங்களைக் கொண்டு நீங்கள் பதில் அளிக்க முடியும் என்பதை அவர் *அறிகிறார்*. இருப்பினும் அவர், ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்தத் தயாராக இருப்பதில்லை, எனவே அவர் பதில் அளிக்க மறுக்கிறார் - மற்றும் நீங்கள் உள்ளாக ஒருசிறிது மரணம் அடைகிறீர்கள். அதைப்போன்றே இஸ்ரவேல் மக்கள் இருந்தனர். "ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை."

ஆயினும், இதைபோன்ற சூழ்நிலைகளில் நம்மில் எவரும் கொண்டுள்ளதைக் காட்டிலும் அதிகக் கூர்மையானவராக எலியா இருந்தார். அவர் தமது சிந்தையில் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார்:

> "கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும்; ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைக்கக்கடவர்கள்; நான் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன். நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன், அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" (வசனங்கள் 22-24அ).

எலியா இன்னும், பாகாலின் தீர்க்கதரிசிகளிடத்தில் அல்ல, ஆனால் மக்களிடம்தான் பேசிக்கொண்டிருந்தார். மழையைத் திரும்பிவரச் செய்யும்படி தேவன் எலியாவை அனுப்பியிருந்தார் (வசனம் 1), ஆனால் நாட்டளவிலான மனந்திரும்புதலின் சில அடையாளமாவது வருமளவும் அது நடைபெறாது. இவ்வாறாக எலியா ஒரு முன்மொழிதலை ஏற்படுத்தினார்.

அவர், "கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்" என்று தொடங்கினார். ஒரு குகையில் ஒரு நூறு தீர்க்கதரிசிகள் ஒளித்துவைக்கப்பட்டிருந்தனர் (வசனம் 13), ஆனால் அந்தக்கணத்தில் எலியா ஒருவரே தீர்க்கதரிசியின் *ஊழியத்தைச்* செய்பவராக இருந்தார். அவர் தமது முன்மொழிதலை விளக்கப்படுத்தத் தொடங்கினார்: "பாகாலின் தீர்க்கதரிசிகள் நமக்கு இரண்டு காளைகளைத் தரட்டும்." இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள் அரசரின் பாதுகாப்பின்கீழ் இருந்தால், அவர்கள் ஒரு ஜோடிக் காளைகளைக் கொண்டுவருவதற்கு, மிகவும் அருகில் இருந்த புல்வெளிக்குச் செல்ல முடியும். காளை என்பது பாகாலின் சின்னங்களில் ஒன்றாக இருந்தது. எலியா, "அவர்களே முந்தி ஒரு காளையைத் தேர்ந்துகொள்ளட்டும்" என்று தொடர்ந்து கூறினார். மேம்போக்காகக் காணுகையில், இந்த அறைகூவலில் எல்லா அனுகூலமும் பாகாலுக்கே உள்ளது. எலியா, "பின்பு அவர்கள் தங்களின் காளையைத் துண்டுதுண்டாக வெட்டி விறகின்மேல் வைக்கட்டும், ஆனால் அதன்கீழ் நெருப்பு வைக்கக்கூடாது. நான் எனது காளைக்கு அவ்வாறே செய்வேன்," என்று அடுத்ததாக அறிவுறுத்தினார். பலிக்குக் கீழே உள்ள விறகைக் கொளுத்துதல் என்பதே பலிசெலுத்துவதற்கான வழக்கமான வழியாக இருந்தது. பின்பு எலியாவின் உறுதியும் இறுதியுமான கூற்று வந்தது: "நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள், நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன், அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்!"

எலியாவின் - சில ஆண்டுகளுக்கு மழைபெய்யக் கூடாது என்ற - முதல் அறைகூவல் பாகாலை நோக்கியே விடுக்கப்பட்டது, எனவே இதுவும் அதைப்போன்றே விடுக்கப்பட்டது. பாகால் *இயற்கைக்கு* தெய்வம் என்று கருதப்பட்டான். இடிமுழக்கமிடும்போது அது பாகால் பேசுவதாகக் கருதப்பட்டது. மற்றும், பாகாலை ஆராதிப்பவர்கள் சூரியன் பாகாலின் அரியணையாகும் என்று நம்பினர். அவர்கள் சூரியனைப் பார்க்கும்போது, பாகாலுக்குத் துதிகளை உரத்துக் கூவினர். பாகால் உண்மையிலேயே இயற்கையின் தெய்வமாக இருந்தால், பரலோகத்தில் இருந்து அக்கினியை

அனுப்புதல் என்பது அவனுக்கு ஒரு பிள்ளை விளையாட்டாகவே இருக்க வேண்டும்.

எலியாவின் அறைகூவலானது இஸ்ரவேல் மக்களின் கற்பனையைப் பற்றிப்பிடித்தது. ஆசரிப்புக் கூடாரத்தை மோசே அமைத்தபோது (லேவியராகமம் 9:24), மற்றும் சாலொமோனின் தேவாலய அர்ப்பணிப்பின் போது (2 நாளாகமம் 7:1). யெகோவா தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பியதை அங்கிருந்த சிலர் நினைவுகூர்ந்திருக்கலாம். இது "தேவர்களின் யுத்தம்" என்பதாக இருந்தது! "அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்"[7] (வசனம் 24ஆ).

## ஒரு இறையியல் ரீதியான எதிர்கொள்ளுதல் (18:25-29)

முதன் முறையாக எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளிடத்தில் பேசினார்: "நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள்" (வசனம் 25).

எலியா மக்களைக் குறித்து மிகவும் கவலையுள்ளவராக இருந்தபடியால், முதலில் அவர்களிடம் அவர் பேசினார்; மற்றும் அவ்வாறு செய்ததில் அவர் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குக் கொக்கி இட்டிருந்தார். தாம் கூறிய முன் மொழிதல் நியாயமானதாக ஒலித்ததா அல்லது அதைச் செய்ய அவர்கள் விரும்புகின்றனரா என்று எலியா அவர்களிடத்தில் கேட்கவில்லை. அவர்கள் அதைச் செய்ய வேண்டும் அல்லது மக்களின் முன்பாகத் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டாக வேண்டும்; அவர்களுக்கு எலியா *கட்டளையிட்டார்.*

இப்போது நாம், வீணான மதத்தின் சத்தம் மற்றும் சீற்றத்தைக் காண்கிறோம்.

நாம் மனிதத்துவத்தில் இருப்பதில், ஆவிக்குரிய காட்சியை, மதப்பகுதியில் வலிவு மற்றும் வலிவார்ந்த தன்மையுடன் காண்பதில் மனம் ஈர்க்கப்படுகிறோம். நாம், "நிச்சயமாகவே இந்த அல்லது அந்தக் குழுவினர் சரியானவர்களாக உள்ளனர். அவர்கள் செய்கிற எல்லாவற்றையும் பாருங்கள். அவை எவ்வளவு பெரியவைகளாக உள்ளன என்று பாருங்கள். அவர்கள் அவ்வளவு *செயல் முனைப்புடன்* உள்ளனர்!" என்று கூறுகிறோம். நீங்கள் ஐந்து, ஆறு அல்லது ஏழுமணி நேரம்கூட அமர்ந்தால் ஒழிய, பாகாலின் தீர்க்கதரிசிகள் நிகழ்த்தும் அந்த நடவடிக்கையைக் கண்டிருப்பதில்லை!

> தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள் (வசனம் 26).[8]

உலகப்பிரகாரமான பதிவேடுகளில்[9] இருந்து நாம், பாகாலின் தீர்க்கதரிசிகள் என்ன செய்தனர் என்பது பற்றி நியாயமான வகையில் மிகச்சரியான சித்தரிப்பை

மறுகட்டுமானம் செய்ய முடியும். அவர்கள் "பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும்" என்ற கூக்குரலுடன் தொடங்கினார்கள், பின்பு அவர்கள் அசைந்தாடும் இயக்கத்துடன் நடனமாடத் தொடங்கினர். அவர்கள், "ஓ பாகாலே, நாங்கள் கூறுவதைக் கேளும்" என்று உரக்க ஓலமிட்டனர். அவர்களின் நடனம் அதிகம் வெறிகொண்டதாக ஆயிற்று. அவர்கள் சுற்றிச் சுற்றி சுழன்றனர், முன்னும் பின்னும் காட்டுத்தனமாக அசைந்தனர், பீடத்தை நோக்கியும் பின்பு அதிலிருந்து பின் வாங்கியும் அதற்குப் புறம்பாகவும் அசைந்தாடினர். அவர்களின் தலைகள் தாழ்ந்தன, அவர்களின் வெட்டப்படாத தலைமுடி தரையைக் கூட்டியது. அவர்கள் "ஓ பாகாலே, எங்களுக்கு உதவும்!" என்று அலறுகையில், வெறித்தனமாகச் செயல்பட்டனர். இது காலையில் இருந்து நண்பகல் வரையிலும் பலமணி நேரம் நடந்தது.

அந்த வேளையில் வெறித்தனமானது தொற்றக்கூடியதாகும் மற்றும் பிற மக்களும் அதில் சேர்ந்து கொள்வார்கள். இருப்பினும் எலியா அதை எதிர்பார்த்துச் செயல்பட்டார்: "மத்தியானவேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும்" என்றான் (வசனம் 27).

இது வேடிக்கை நிறைந்த வசனமாக உள்ளது; எலியா கேலியாகச் சில விஷயங்களைக் கூறினார். இருப்பினும், அவர்களுக்கு அதைக் கூற அவர் உரிமை கொண்டிருந்தார். விக்கிரக ஆராதனையாளர்கள், தங்கள் புறதெய்வக் கடவுள்கள், தங்களின் பேருருவமாக, தங்கள் மனிதத் தன்மைகளின் புறவடிவமாக இருப்பதாக நினைத்தனர். அவர்களின் கடவுள்கள் மனிதப் புலன் ஆசைகள் கொண்டிருந்தன, அவைகள் மனித உடலின் செயல்பாடுகளைக் கொண்டிருந்ததாக அடிக்கடி சித்தரிக்கப்பட்டன.

எலியா வேடிக்கையான இந்த விஷயங்களைக் கூறுவதில் மிகவும் தீவிரமான நோக்கம் ஒன்றைக் கொண்டிருந்தார். இஸ்ரவேலர்கள் இந்தப் பைத்தியக்காரத்தனத்தில் பிடிபட்டு விடுவதில் இருந்து அவர்களைக் காப்பதற்காக உருவக நடையில் ஒரு வாளித் தண்ணீரை அவர்கள் தலைகளில் ஊற்றுதல் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. செயல்விளைவில் அவர், "இது கேலிக்கூத்தல்லவா?" என்று மக்களிடம் கேட்டார்.

அவர், "உரத்து சத்தமிடுங்கள்! நீங்கள் சரியானவர்களாக இருந்தால், மற்றும் பாகால் ஒரு தேவனாக இருந்தால், பிரச்சனை அவனுடையதாக இருக்க இயலாது; பிரச்சனை உங்களில்தான் இருக்க வேண்டும். போதுமான அளவுக்கு நீங்கள் சத்தமிடவில்லை, நீங்கள் அவனது கவனத்தைப் பெறவேண்டும்!" என்று ஏளனம் செய்தார்.

"ஒருவேளை அவன் 'தியானமாயிருப்பான்.' " நீங்கள் "ஏற்கனவே வேலை நிறைய உள்ளது" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினால் இதன் கருத்தைப் பெறுவீர்கள். ஒரு மனிதர் தனது மனைவி தனது கவனத்தைப் பெற முயற்சிக்கையில் அவர் [ஏற்கனவே] தொலைக்காட்சியில் கால்பந்து விளையாட்டு ஒன்றைக் கவனித்தல் பற்றி நினைத்துப் பாருங்கள். "ஒருவேளை பாகால் ஒரு அருமையான பந்தாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்கலாம்."

"ஒருவேளை அவன் 'அலுவலாயிருப்பான்.' " "அலுவலாயிருப்பான்"

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது, வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் "குளியல் அறைக்குச் செல்லுதல்"; என்பதற்கு மங்கல வழக்குச் சொல்லாக இருந்தது. [மலங்கழிக்கச் செல்லுதலை நாம் "வெளியே போய்வருதல்" என்று கூறுதல் மங்கல வழக்காகும்.] மற்றும் மிகவும் முற்பட்ட காலத்து விளக்கவுரையாளர்கள், எலியா இதையே அர்த்தப்படுத்தினார் என்று நம்பி இணங்குகின்றனர். இருப்பினும் இது, உணவுக்காக வேட்டையாடுதல் போன்ற ஒரு வேலையைக் கவனிக்கச் செல்லுதலைக் குறிக்கக்கூடும். கூருணர்வுள்ளவர்களுக்கு, எலியா "ஒருவேளை பாகால் உணவைக் கொண்டுவர உணவகத்திற்குச் சென்றிருக்கலாம்" என்று கருத்துத் தெரிவித்தார் என நாம் கூறுவோமாக.

"ஒருவேளை அவன் பிரயாணம்போயிருப்பான்." "ஒருவேளை அவன் குளிர்காலத்திற்காக ஒரு வெதுவெதுப்பான காலநிலை கொண்ட இடத்திற்குப் போயிருப்பான்." "ஒருவேளை அவன் தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும்." அவன் கூடுதலாக ஒரு தூக்க மாத்திரையை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்!

எலியாவின் ஏளனம் இரண்டு விளைவுகளைக் கொண்டிருந்தது: அது இஸ்ரவேல் மக்கள் இந்த வெறித்தனத்தினால் பிடிக்கப்படுதலில் இருந்து அவர்களைக் காத்தது, மற்றும் அது பாகாலின் தீர்க்கதரிசிகளை மூர்க்க மானவர்கள் ஆக்கிற்று!

> *அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக் கொண்டார்கள். மத்தியானவேளை சென்றபின்பு, அந்திப்பலிசெலுத்தும் நேரமட்டாகச் சன்னதம் சொல்லிக்கொண்டிருந்தார்கள் (வசனங்கள் 28, 29அ).*

பாகாலின் கள்ளத் தீர்க்கதரிசிகள் தங்களை, பாகாலியச் சடங்காச்சாரத் தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைக்குத் தங்களை கொண்டு சென்றனர். அவர்களின் ஓலமானது பேய்த்தனமான அலறுதலாயிற்று. அவர்கள் கூர்மையான கருவிகளைக் கொண்டு தங்கள் உடல்களில் காயம் ஏற்படுத்திக் கொண்டனர், மற்றும் அவர்களின் இரத்தமானது அவர்களின் உடல்கள் மீதிருந்த வியர்வையுடன் ஒன்றுகலந்து பாய்ந்தோடிற்று. அவர்கள் வேகமாக வேக மாக சுழன்றபோது நீங்கள் அருகில் நின்றிருந்தால், நீங்கள் இரத்த வியர்வை தெளிக்கப்பட்டவர்களாக இருந்திருப்பீர்கள்.

அவர்கள் "தீர்க்கதரிசனம்" கூறத் தொடங்கினர் (NASB வேதாகமத்தில் "raved" ["பிதற்றினர்"] என்றுள்ளது, ஆனால் "தீர்க்கதரிசனம்" என்பதே இதற்குரிய எபிரெய வார்த்தையாக உள்ளது). அவர்கள் என்ன செய்தனர் என்று நீங்கள் அறிய விரும்பினால், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெய்வீக அருங்கொடை நிகழ்ச்சியைக் கவனியுங்கள். அவர்கள் ஒத்திசைவற்ற, பொருளற்ற சொற்றொடர்களை - இவற்றைச் சிலர் "பரவச உச்சரிப்புகள்" என்று அழைக்கின்றனர் - பேசத்தொடங்குகின்றனர். அது குழப்பமும் முற்றிலும் பைத்தியமுமான காட்சியாக இருந்தது.

கடைசியில் அவர்கள் தரையின்மீது சீர்குலைந்து விழுந்தனர், சக்தி

தீர்ந்துபோன 450 தீர்க்கதரிசிகள், அவர்களின் அழகிய உடைகள் இரத்தத்தி லும் வியர்வையிலும் தோய்ந்து தூசியடைந்து போயிருந்தன, இது ஆறு அல்லது ஏழுமணி நேரம் பைத்தியக்காரத் தனத்திற்குப் பின் ஏற்பட்டது. (அவர்களைப் பற்றி ஒரு விஷயம் கூறப்பட முடியும்: அவர்கள் இவையாவற்றையும் செய்வதற்கு ஒரு நல்ல உடல் அமைப்பைக் கொண்டிருந்திருக்க வேண்டும்!)

பின்பு நாம் பின்வரும் கவலைக்குரிய விளக்கத்தைக் கொண்டுள்ளோம்: "ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை, கவனிப்பாரும் இல்லை" (வசனம் 29ஆ).

உண்மைத் தன்மையைப்பற்றிய ஒரு வார்த்தையை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக. மார்க்கரீதியில் உண்மைத் தன்மை என்பது மிகவும் முக்கியமான விஷயமாகும் என்ற பொதுவான தத்துவம் ஒன்று உள்ளது, அதாவது ஒருவர் உண்மைத் தன்மையுடன் இருக்கும் வரையிலும், அவர் மதரீதியாக எதை நம்புகிறார் அல்லது செய்கிறார் என்பது சிறிதளவே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. தூசியில் கிடக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கண்ணோக்குங்கள், மற்றும் நீங்கள் அங்கே உண்மைத் தன்மையின் நபர்த்துவத்தைக் காண்பீர்கள். இருப்பினும் அது யாவும் ஒன்றுமற்றதற்கானதாகவே இருந்தது. உண்மைத் தன்மையுடன் இருத்தல் மாத்திரம் போதுமானதல்ல; ஒருவர் வேதாகமத்திற்கு இசைந்த வகையில் உண்மையிலேயே *சரியானவராக* இருக்க வேண்டும்.

## ஒரு தீர்மானமான எதிர்கொள்ளுதல் (18:30-35)

இப்போது எலியாவின் முறையாக இருந்தது. "அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி: என் கிட்டே வாருங்கள் என்றான்; சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்த[னர்]" (வசனம் 30அ). மக்களில் சிலர் அதற்கு முந்திய ஆறு அல்லது எழுமணி நேரங்களில் சிதறியிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. எலியா அவர்கள் யாவரையும் மீண்டும் ஒன்றுகூட்டினார்.

"தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்[டான்]" (வசனம் 30ஆ). அவர்கள் கர்த்தரின் பலிபீடத்தைத் தகர்த்துப் போட்டு பாகாலுக்கும் ஆசேராவுக்கும் பலிபீடங்களைக் கட்டி இருந்தனர். இப்போது எலியா, கர்த்தருடைய பலிபீடத்தைத் திரும்பவும் கட்டியெழுப்பினார். மீண்டும் எலியா, மீளக்கட்டுவிக்கும் பணியில் ஈடுபட்டார். அவர் ஒரு புதிய பிரமாணத்தைக் கொண்டுவரவில்லை, மாறாக அவர் பழைய பிரமாணத்தை மீளக்கட்டுவித்தார். "உனக்கு இஸ்ரவேல் என்னும் பேர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, பன்னிரெண்டு கற்களை எடுத்[தார்]" (வசனம் 31).

எலியா, இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களைக் குறிக்கும்படியாகப் பத்துக் கற்களைப் பயன்படுத்தவில்லை. மாறாக அவர் பன்னிரெண்டு கோத்திரங்களையும் குறிக்கும்படியாகப் *பன்னிரெண்டு* கற்களைப் பயன்படுத்தினார். மக்கள் பிரிக்கப்பட்டிருந்தனர், ஆனால் அவர்கள் *ஒன்றாக* இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவனுடைய வழிநடத்துதலினால் எலியா, பன்னிரெண்டு கோத்திரங்களும் இஸ்ரவேல் என்று அறியப்பட்டிருந்த காலத்தைத் திரும்பக் கொண்டு வந்தார் என்பதில் சந்தேகம் இல்லை.

*அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி, விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் வைத்தான். பிற்பாடு அவன்: நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து, சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின்மேலும் ஊற்றுங்கள் என்றான்; பின்பு இரண்டாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; இரண்டாந்தரமும் ஊற்றினார்கள்; அதற்குப்பின்பு மூன்றாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; மூன்றாந்தரமும் ஊற்றினார்கள். அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது; வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினான் (வசனங்கள் 32-35).*

"தானியம் அளக்கிற ஒரு படி" என்பது எவ்வளவு பெரியதாக இருந்தது என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் அது கணிசமான அளவாக இருந்தது என்பது உறுதி. மீண்டுமாக, தண்ணீர்க் குடங்கள் எவ்வளவு பெரியவைகளாக இருந்தன என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் பின்வரும் விஷயத்தைப் பற்றி நாம் உறுதியாக இருக்க முடியும்: பலிபீடத்தின்மீது பன்னிரெண்டு குடங்கள் தண்ணீர் ஊற்றப்பட்ட பின்பு, அது *ஊறிப்போயிருந்தது.*

விமர்சகர்கள், "மூன்றரை ஆண்டுகளாகப் பஞ்சம் இருந்தது, இருந்தாலும் அவர்கள் இந்தத் தண்ணீரையெல்லாம் கண்டார்கள்!" என்று ஏளனம் செய்கின்றனர். இருப்பினும், எண்ணற்ற ஊற்றுக்களினால் தண்ணீர் வரத்துப் பெற்றிருந்த கீசோன் ஆறு (வசனம் 40) அருகில் இருந்தது.[10] மேலும் கர்மேல் மலையானது மத்தியதரைக்கடலின் மேல் இருந்தது. கடல் தண்ணீர் குடிப்பதற்கு நல்லது அல்ல, ஆனால் பொருட்களை நனைப்பதற்கு அது மிகவும் சிறந்ததாக உள்ளது. எனது குடும்பமும் நானும், 1968ல் கப்பல் மூலமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபோது, சேமிப்புத் தொட்டிகளில் இருந்து நாங்கள் தண்ணீரைக் குடித்தோம், ஆனால் கடல் நீரிலேயே நாங்கள் குளித்தோம். கடலின் அருகில், ஒருவர் வற்றாத கடல் தண்ணீர் அளிப்பைக் கொண்டுள்ளார்!

பலியையும் அதைச் சுற்றிலும் உள்ள யாவற்றையும் தண்ணீரில் நனைத்தல் என்பதன் கருத்து என்னவாக இருந்தது? அதில் சூழ்ச்சி எதுவும் இல்லை என்றும், பலியை எரிக்க இயற்கையான வழி எதுவும் இல்லை என்றும் நிரூபிக்கவே இவ்வாறு செய்யப்பட்டது. கோவிலுக்குள் எடுத்துச் செல்லும் விறகுக்குள் எரியும் கரிக்கட்டையை மறைத்து கடத்திச்செல்வதுபோன்ற சூழ்ச்சியை புறதெய்வ ஆசாரியர்கள் செய்யாமல் இருந்ததில்லை. (ஒருமுறை, ஆசாரியர்கள் பலிபீடத்தின் கீழ் ஒரு துளைசெய்து அதற்குள் ஒரு ஆசாரியரை வைத்திருந்து மனோதத்துவப்படியாகச் சரியான வேளையில் நெருப்பைக் கொளுத்தி அதை "அற்புதமாக" நெருப்பு எரிகிறது என்று கூறுதல் போன்ற சூழ்ச்சிக்கு ஒழுங்கு செய்திருந்தனர். இருப்பினும், மூடிய அறைக்குள் இருந்த ஆக்சிஜனை எரியும் சுவாலை செலவிட்டுவிட்டதால் அந்த ஆசாரியர், தமது வேலையைச் செய்து முடிக்கக்கூடும் முன்னதாக மூச்சுத்திணறி அகப்பட்டுக்கொண்டார் என்று சரித்திரம் கூறுகிறது.)

எலியா எல்லாவற்றையும் ஊறவைத்தார். முடிவெடுக்கும் வேளைக்கென்று

*மக்களை அவர் ஆயத்தம் செய்தார்.*

## *ஒரு ஜெபம் நிறைந்த எதிர்கொள்ளுதல் (18:36-39)*

*எலியா மீண்டுமாகத் தமது தேவனுக்கு முன்பாக இருந்தார். பாகாலின் ஆசாரியர்கள் ஆறு அல்லது ஏழுமணி நேரமாக ஊளையிடுதலில் ஈடுபட்டிருந்தனர். இதற்கு மறுபுறத்தில், எலியா இரண்டு வசனங்கள் நீளமே உள்ள ஒரு எளிய ஜெபத்தை உரைத்தார். அங்கு சித்தப் பிரம்மை எதுவும் இல்லை, ஆனால் விசுவாசமும் நம்பிக்கையும் மாத்திரமே இருந்தது. (அவர் ஜெபிப்பதற்கு முன்னர் மக்களிடம் பின்னால் தள்ளி நிற்கும்படி கேட்டுக்கொண்டதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது!)*

> *அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: "ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்" என்றான் (வசனங்கள் 36, 37).*

*"அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி[11] இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது" (வசனம் 38). நான் அதிகமாகக் கூடாரத்தில் தங்கி இருந்த விஷயம் நீண்ட நாட்களுக்கு முன்பு நடைபெற்றிருந்தது. ஆனால் பாறைகள் நெருப்பை மிகவும் அரிதாகவே ஏற்படுத்துகின்றன மற்றும் மண்ணானது நெருப்பை அணைக்கப் பயன்படுத்தப்பட முடியும் என்பதை நான் அறிவேன். இருப்பினும், கர்த்தருடைய அக்கினி பாறைகளையும், மண்ணையும், எல்லாவற்றையும் பட்சித்தது! அது என்ன ஒரு காட்சியாக இருந்திருக்க வேண்டும்! அந்தப் பகுதி யில் சென்று பார்த்துள்ளவர்கள், நெருப்பானது பல மைல்கள் தூரம்வரையில் - யேசபேல் இருந்த இடமான யெஸ்ரயேலில்கூட காணப்பட்டிருக்க முடியும் என்று நமக்குக் கூறுகின்றனர் (1 இராஜாக்கள் 18:46; 19:1)!*

*அது கூட்டத்தின் மீது கொண்டிருந்த செயல்விளைவு என்ன? "ஜனங்களெல் லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: 'கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்' " (வசனம் 39). "கர்த்தர்" என்பது* NASB *வேதாகமத்தில் பெரிய எழுத்துக்களில் உள்ளது, இது "யெகோவா" என்று அடிக்கடி மொழி பெயர்க்கப்படுகிறதான தேவனுடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து நிற்பதைக் காண்பிக்கிறது. மக்கள், "யெகோவாவே தேவன்!" என்று உரத்துக் கூவினார்கள், பாகால் தெய்வமல்ல; யெகோவாவே தேவனாக இருக்கிறார்! பல ஆண்டுகளில் முதன் முறையாக, யெகோவாவின் நாமம் மக்களின் உதடுகளில் இருந்தது. அந்த வேளைக்கு, தீர்மானமற்ற நிலை கடந்து சென்றிருந்தது!*

## ஒரு நடைமுறை எதிர்கொள்ளுதல்
## *(18:40)*

*இந்த வரலாற்றைக் கூறி முடிப்பதற்கு நாம் 40ம் வசனத்தை வாசிப்பது அவசியமாக உள்ளது: "அப்பொழுது எலியா அவர்களை நோக்கி: நீங்கள் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு அவர்களைப் பிடியுங்கள் என்றான்; அவர்களைப் பிடித்தபோது, எலியா அவர்களைக் கீழே கீசோன் ஆற்றங்கரையிலே கொண்டுபோய், அங்கே அவர்களை வெட்டிப்போட்டான்."*

உண்மையில், மக்கள் அந்தச் செயலை "எலியாவின் தூண்டுதல்" பேரிலேயே செய்தனர் என்ற விபரத்தை, யோசிப்பஸ் என்பவர் கூடுதலாகக் கூறுகிறார்.

மிருகத்தனமாகக் காணப்படும் இந்த நிகழ்வு குறித்து நாம் அதிர்ச்சி யடைகிறோம். இப்படிப்பட்ட நடவடிக்கை ஒன்றில் அடங்கியுள்ள யாவற்றையும் குறித்துப் பிந்தியபாடம் ஒன்றில் நாம் பார்ப்போம்; ஆனால் இந்த வேளையில் நாம், ஒருசில விளக்கங்களை ஆழ்ந்து சிந்திப்போம்: கள்ளத் தீர்க்கதரிசிகள் கொல் லப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கட்டளையிட்டது (உபாகமம் 7:1-5; 13:13, 14). இது அரசரால் செய்யப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு நடக்கவில்லை; உண்மையில் இந்தத் தீர்க்கதரிசிகள் அரசரின் பாதுகாப்பின்கீழ் இருந்தனர். எலியா மீண்டும் ஒருமுறை, தேவனுடைய பிரமாணங் களை மக்கள் மதிக்க வேண்டும் என்பதைச் செயல்விளக்கப்படுத்தினார்.

இந்தச் சூழ்நிலையை இன்னொரு வழியில் கண்ணோக்கினால், நாட்டில் கடுமையானநிலை இருந்தது. ஒரு மருத்துவர் கடுமையான புற்றுநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கிறார்? அதில் சிலவற்றை மாத்திரம் அவர் நீக்குவ தில்லை. அவர் புற்றுநோய்க்கட்டி முழுவதையும் எடுக்க முயற்சி செய்கிறார். அதைச் சுற்றிலும் உள்ள சில திசுக்களையும் அவர் எடுக்கிறார். அவர் தமது நோயாளியைக் குணப்படுத்த *எல்லாவற்றையும்* எடுத்துப்போட வேண்டும். அதுவே இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக இருந்தது.

## முடிவுரை

18ம் அதிகாரம் மன எழுச்சி மிக்கதாக உள்ளது; அது இஸ்ரவேலுக்கு "முடிவெடுக்கும் வேளையாக" இருந்தது. *இன்றைய நாள்* நமக்கு முடிவெடுக்கும் வேளையாக உள்ளது.

கர்மேல் மலையில் மூன்று அடிப்படைக் குழுக்கள் இருந்தன, இந்த மூன்று குழுக்களும் ஏறக்குறைய எந்த வேளையிலும் கணிசமாக எண்ணிக்கையில் மக்கள் கூடிவரும் குழுக்களாக உள்ளன.

முதலாவது, எலியா போன்று முற்றிலும் தேவனுக்குத் தங்களை அர்ப்பணித்து, அவரது சித்தத்தைச் செய்யத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்தவர்கள் உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக இந்தக் குழுவானது எப்போதுமே சிறுபான்மையாக உள்ளது. இருப்பினும் இவர்களே, தேவன் பயன்படுத்தக் கூடியவர்களாக, தேவன் தேடுகிறவர்களாக உள்ளனர்.[12] தேவன் இன்றைய நாளில் ஒரு ஆராதனை கூடுகைக்கு வந்து, தாம் பயன்படுத்தக்கூடிய ஒரு ஆண், ஒரு பெண், ஒரு பையன், ஒரு பெண் ஆகியோரைத் தேடினால் எப்படியிருக்கும்? அவர் உங்களிடம் வந்து, "*இதோ*, இந்த நபரின்மீதே எனது

இருதயம் நிலைத்துள்ளது; இந்த நபரை நான் எனது ஊழியத்தில் பயன்படுத்த முடியும்" என்று கூறக்கூடுமா? அப்படிப்பட்ட மக்கள் சபையில் இருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்: தேவைப்பட்டால் சரியான விஷயத்திற் காகத் தனித்தும் நிற்க மனவிருப்பம் கொண்டுள்ள ஆண்கள், பெண்கள், பையன்கள் மற்றும் பெண்பிள்ளைகள் உள்ளனர்.

இரண்டாவது, பாவத்தினால் கடினப்பட்டவர்களாகி அநீதிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த பாகாலின் தீர்க்கதரிசிகளைப் போன்றவர்கள் உள்ளனர். எலியா அவர்களை மனந்திருப்ப முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. இதைப்போன்ற மக்கள் எப்போதுமே உள்ளனர் என்பது கவலைக்கு உரியதாயினும் உண்மையே. அவர்களின் ஆத்துமாக்களைப் பற்றி அவர்களிடத்தில் பேச சிறிதளவே போது மானது. அவர்கள் பல பிரசங்கங்களைக் கேட்டுள்ளனர். ஆனால் சத்தியமானது அவர்கள்மேல் ஒட்டாமல் உருண்டு சென்றுவிடுகின்றது. நீங்கள் அவர்களிடத்தில் ஏதேனும் கூறினால், அவர்கள் "என்னைத் தனித்திருக்க விட்டு விடுங்கள்! எனக்குப் பிரசங்கம் செய்யாதீர்கள்!" என்று பதில் அளித்துவிடுகின்றனர்.

பின்பு, மூன்றாவதாக ஒரு குழுவினர் உள்ளனர், இது இருப்பவற்றிலேயே மிகப்பெரிய குழு ஆகும்: இவர்கள் இஸ்ரவேல் மக்களைப் போன்று, பிளவுபட்ட பற்றுறுதியுடன், இரு நினைவுகளுக்கு இடையில் குந்திக் குந்தி நடக்கின்றனர். இவர்கள் அவ்வளவு அபாயகரமாக மோசமானவர்கள் அல்ல, அதே வேளையில் அவர்கள் மிகவும் நல்லவர்களும் அல்ல. இப்படிப்பட்ட குழுவினிடத்தில்தான் எலியா பேசினார்; இந்த மக்களைப் பற்றித்தான் அவர் கவலையாயிருந்தார்; இவர்களிடத்தில்தான் ஒரு முடிவெடுக்கும்படி அவர் அறைகூவல் விடுத்தார்.

ஆவிக்குரிய வகையில் நம்மில் பலர் குந்திக் குந்தி நடந்துகொண்டிருப்பது உண்மையல்லவா? நீண்ட நாட்களுக்கு முன்னர் எலியா விடுத்த அறைகூவலே நம் ஒவ்வொருவருக்குமான அறைகூவலாக உள்ளது: யாரைச் சேவிப்பீர்கள் என்பதை உங்கள் சிந்தையில் தீர்மானம் செய்யுங்கள்! அதிகாரம் உங்கள் கடவுளாக இருந்தால், யெகோவாவை மறந்தவிட்டு அதிகாரத்தைச் சேவியுங்கள். பிரபலமாகுதல் என்பது உங்கள் கடவுளாக இருந்தால், யெகோவாவை மறந்துவிட்டு பிரபலமாகுதலை சேவியுங்கள். பணம் உங்கள் கடவுளாக இருந்தால், யெகோவாவை மறந்துவிட்டு பணத்தைச் சேவியுங்கள். இருப்பினும் யெகோவா உங்கள் தேவனாக இருந்தால், *அவரைச் சேவியுங்கள்.* நீங்கள் உங்கள் மனதில் தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது: "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது" (மத்தேயு 6:24).

இன்றைக்கே ஒவ்வொரு நபரும், "கர்த்தரே தேவனாக இருக்கிறார்; கர்த்தரே தேவனாக இருக்கிறார்!" என்று கூறித் தன்னை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தால் அது அற்புதமானதாகவே இருக்கும். ஒருவர் தனது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க முடிவுசெய்து, பின்பு தேவனுடைய மனிதனாக அல்லது தேவனு டைய மனுஷியாக இருக்கும் செல்வாக்கின் வட்டாரத்தில், பணிக்கோ அல்லது பள்ளிக்கோ திரும்பிச் செல்வதில் இருக்கிற அதே அளவு மெய்சிலிர்த்தலாக அது உள்ளது.

அந்த முடிவை மேற்கொள்வதற்கு பரலோகத்தில் இருந்து அற்புதவித மான அக்கினி எதுவும் இறங்கி உங்களுக்கு உதவப்போவதில்லை, ஆனால் நாம் தேவனுடைய வசனத்திலிருந்து படித்துக் கொண்டிருந்தோம் மற்றும் அது வல் லமை நிறைந்தது என்று நம்புங்கள் (ரோமர் 1:16). அது "ஒரு அக்கினி" *போன்றது*

என்று எரேமியா கூறுகிறார் (எரேமியா 5:14; 23:29; புலம்பல் 1:13). அது உங்கள் எலும்புகளில் எரிவதை உங்களால் உணரமுடிகிறதா?

*நீங்கள்*, "தேவனுடைய வசனம் உண்மையானது! யெகோவாவே தேவன்! நான் அவருக்குக் கீழ்ப்படிவது அவசியம்!" என்று கூறுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

---

குறிப்புக்கள்

[1]வேதாகமத்தை விமர்சிப்பவர்கள் "மூன்றாம் வருஷமாகையில்" என்ற சொற்றொடருக்கும், புதிய ஏற்பாடு இந்தப் பஞ்சம் மூன்றரை வருஷங்கள் நீடித்தது என்று கூறுகிற உண்மைக்கும் இடையில் முரண்பாட்டைக் கண்டறிய முயற்சி செய்துள்ளனர். எலியா அனேகமாக கேரீத் ஆற்றண்டையில் ஏறக்குறைய ஒரு ஆண்டையும் சாறிபாத் ஊரில் இரண்டரை ஆண்டுகளையும் ("மூன்றாம் வருஷமாகையில்") செலவிட்டிருக்கலாம். இது மூன்றரை ஆண்டுகளாகிறது. [2]ஆசேரா என்ற தெய்வம் உட்படப் பாகால் வணக்கத்தின் பல்வேறு வடிவங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருந்த காரணத்தினால் இங்கு [பாகால்கள் என்ற] பன்மை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. [3]அமெரிக்காவில் 1800களின் பிற்பகுதி யில் கர்த்தருடைய சபை ஆராதனையில் இசைக்கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது இங்கு கருதப்பட வேண்டியதொரு விஷயமாக உள்ளது. இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தியவர்கள், அதை எதிர்ப்ப வர்களைப் பிரிவினைக்குக் காரணமானவர்கள் என்று கூறினர். எதிர்த்தவர்கள், "நீங்கள்தாம் [பிரிவினை ஏற்படுத்தும்] ஆப்பைச் செலுத்துகிறீர்கள்!" என்று பதிலளித்தனர் (ரோமர் 16:17). [4]"கர்மேல்" என்பது "தோட்ட நிலம்" அல்லது "பூங்கா" என்று அர்த்தப்படுகிறது. இது வடக்கு இஸ்ரவேலில் மிகவும் வளம் பொருந்திய நிலப்பகுதியாக இருந்தது. கர்மேல் "மலை" என்பது உண்மையில், பன்னிரெண்டு மைல்கள் நீளமுள்ள ஒரு குன்றாகும். இப்போது ஏல் முஹரகா, அதாவது "தகனம் செய்தலின் இடம்" என்று அழைக்கப்படும் மிக உயர்ந்த இடம்தான், பாகாலின் தீர்க்கதரிசிகளுடன் [எலியா] எதிர்கொள்ளுதலைக் கொண்டிருந்ததாகப் பாரம்பரிய மாகக் கூறப்படுகிற இடமாகும். [5]சபைக்குழுமத்தில் இருப்பவர்களின் எண்ணிக்கையை மதிப்பிடுங்கள், பின்பு அது 450 ஆவதற்கு அத்துடன் கூட்டுதல், அதை இரட்டிப்பாக்குதல், அதிலிருந்து கழித்தல் அல்லது அவசியமான வேறு எந்தச் செயலையாவது செய்யுங்கள். [6]Clyde M. Miller, *First and Second Kings*, Living Word Commentary (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 7:272. [7]"இந்த வார்த்தை நல்லதாக உள்ளது" என்பதே எபிரெய மொழியின் நேரடி அர்த்த மாகும். [8]"ஆடினார்கள்" என்பது 21ம் வசனத்தில் உள்ள "குந்திக்குந்தி நடப்பீர்கள்" என்பதற்கான அதே எபிரெய வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விரண்டும் "நொண்டினார்கள்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளன. "அவர்கள் பீடத்தின் மீது நொண்டியடித்தனர்" என்று ஒரு மொழிபெயர்ப்பு கூறுகிறது. அவர்கள் செய்த விஷயம் கோமாளித்தனமாக உள்ளது. [9]இது பாகால் ஆராதனையின் பதிவேடுகள் மற்றும் அத்துடன் கூடுதலாக மற்ற விக்கிரக ஆராதனையின் பதிவேடுகள் ஆகியவையாக உள்ளன. [10]அந்த ஆறு இன்றைய நாள் வரைக்கும் ஓடுகிறது. அது அரபி மொழியில் "கொலையின் ஆறு" என்று அழைக்கப்படுகிறது. அது பலஸ்தீனத்தில் யோர்தானுக்கு அடுத்தபடியாக முக்கியமான ஆறாக உள்ளது.

[11]இது மின்னலாக இருந்தது என்று விளக்கவுரையாளர்கள் அடிக்கடி கருத்துத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் குறைந்தபட்சம் பின்வரும் இரு காரணங்களினால், இது சாதாரண மின்னலாக இருக்கவில்லை என்று நாம் அறிகிறோம்: (1) அது கற்கள் மண்

முதலானவற்றைப் பட்சித்தது. சாதாரண மின்னல் அதைச் செய்வதில்லை. (2) அது மேக மற்ற ஆகாயத்தில் இருந்து இறங்கியது (வசனம் 43). [12]நேரம் அனுமதித்ததென்றால் இங்கு எசேக்கியா 22:23-30ஐப் பயன்படுத்துங்கள்.

## காட்சி - உதவிக் குறிப்புகள்

நீங்கள் உங்கள் வார்த்தைகள் மற்றும் உடல் அசைவுகளினால் இந்தப் பாடத்தின் மன எழுச்சியூட்டும் காட்சிகளை உயிருடன் கொண்டுவருகையில், பிரசங்கியார் அல்லது போதகர்கள் என்ற வகையில் நீங்களே "காட்சி உதவியாக" இருக்கிறீர்கள். இந்த எடுத்துரைப்பில் உங்களையே முன்வையுங்கள்!

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

- A. 1 இராஜாக்கள் 18ம் அதிகாரம், வேதாகமத்தில் மிகவும் மனஎழுச்சியூட்டும் அதிகாரங்களில் ஒன்றாக உள்ளது.
- B. இந்த அதிகாரத்தில் நாம், எதிர்கொள்ளுதல்களின் வரிசை ஒன்றைக் கொண்டுள்ளோம். எலியா, ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் திரும்பத் திரும்ப எதிர்கொள்ளப்படுகிறார்.

I. ஒரு தெய்வீக எதிர்கொள்ளுதல் (18:1, 2அ)

- A. தேவனுக்கும் எலியாவுக்கும் இடையில் ஒரு தெய்வீகத்துவ எதிர் கொள்ளுதல் நடக்கிறது.
- B. தேவன், "போ" என்று கூறுகிறார், மற்றும் எலியா கீழ்ப்படிகிறார்.

II. ஒரு அருளிரக்கமுள்ள எதிர்கொள்ளுதல் (18:2ஆ-16)

- A. இவ்வசனங்களில், எலியாவும் ஆகாபும் எவ்வாறு ஒன்றுகூடினர் என்பதைக் கூறுகிற பக்க வரலாறு ஒன்று அடங்கியுள்ளது. அது ஒபதியா மற்றும் எலியா ஆகியோருக்கு இடையில் நடந்த எதிர் கொள்ளுதல் ஆகும்.
- B. ஆகாபின் வேலைக்காரரான ஒபதியா, ஆகாபின் மிருகங்களுக்குப் புல்வெளிகளைக் கண்டறியச் சென்றுள்ளார். அவர் தேடிக்கொண்டிருக்கையில், அவர் எலியாவைச் சந்திக்கிறார். அவரிடத்தில் எலியா, "இதோ, எலியா இங்கிருக்கிறார்" என்று அரசரிடம் கூறும்படி சொல்லுகிறார் (வசனம் 11). இது ஒபதி யாவைக் கலங்கச் செய்கிறது (வசனங்கள் 9-12), ஆனால் எலியா அவருக்கு மறு உறுதி அளிக்கிறார் (வசனம் 15).

III. ஒரு அரசத்துவ எதிர்கொள்ளுதல் (18:17-20)

- A. ஆகாபும் எலியாவும் கடந்த மூன்றுக்கும் அதிகமான ஆண்டுகளில் முதன்முறையாக முகமுகமாய்ச் சந்திக்கின்றனர். எலியாவே எல்லா இடர்ப்பாடுகளுக்கும் பொறுப்பாளி என்று ஆகாப் குற்றம் சுமத்துகிறார் (வசனங்கள 2ஆ, 17), ஆனால் எலியா அச்சுறுத்தப்படாது இருக்கிறார் (வசனம் 18). (மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகிறபோது, அதனால் விளையும்

பிரச்சனைகளுக்கு அவர்களே பொறுப்பாளிகள் ஆகின்றனர்; அவர்களை எதிர்த்து நிற்கும் மக்கள் பொறுப்பாளிகள் ஆவதில்லை! காண்க: ரோமர் 16:17.)

B. பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கர்மேல் மலையில் ஒன்றுகூட்டும்படி ஆகாபிடம் எலியா கூறுகிறார் (வசனம் 19).

1. கர்மேல் மலையானது பலரால் ஒரு பரிசுத்த இடம் என்று கருதப்பட்டிருந்தது.
2. அது உண்மையான ஆராதனைக்குப் பதிலியாக விக்கிரக ஆராதனை இடம் பெற்றிருந்த ஒரு உயரமான இடமாக இருந்தது.
3. அது ஒரு வியூகத்துவமான இடமாக இருந்தது.

IV. ஒரு தனிப்பட்ட எதிர்கொள்ளுதல் (18:21-24)

A. கர்மேல் மலையில் இருந்த குழுக்களை [மனதில்] சித்தரித்துக் கொள்ளுங்கள்.

1. ஒருபுறத்தில் பின்வருபவர்கள் உள்ளனர்:
   a. பாகாலின் 450 தீர்க்கதரிசிகளும் அவர்களின் தோழர்களும்.
   b. இஸ்ரவேலில் ஆயிரக்கணக்கானவர்கள்: மக்களில் மிகவும் முக்கியமானவர்கள், மக்களின் தலைவர்கள் மற்றும் பிறர்.
   c. அரசர் மற்றும் அவருடைய குழுவினர்.
2. இன்னொரு புறத்தில், தனியாக ஒருவர் நிற்கிறார்: எலியா. அவருக்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம்.
   a. அது 1,000க்கு 1 போட்டியாக இருத்தலாக இல்லை; அது 1,000க்கு 1 கூட்டல் தேவன் என்பதாக இருந்தது.
   b. எலியா இங்கு கட்டுப்படுத்துகிறவராக இருக்கிறார். இந்த அதிகாரத்தில் அவர் பேசும் ஒவ்வொரு முறையும், அது அதிகாரத்துவத்துடன் உள்ளது; வழக்கமாக அது ஒரு கட்டளையாக உள்ளது.

B. கர்மேல் மலையில் தீர்க்கதரிசிகளுடனோ அல்லது அரசருடனோ, எலியாவின் முதல் எதிர்கொள்ளுதல் இருக்கவில்லை, ஆனால் அது மக்களுடனானதாக உள்ளது.

1. எலியா, "இது முடிவெடுக்கும் வேளையாக உள்ளது!" என்று கூறுகிறார் (வசனம் 21அ).
2. அவருக்கு மக்கள் "ஒரு வார்த்தையும்" பதில் அளிக்கவில்லை (வசனம் 21ஆ). அவர்கள் இன்னமும் தங்களை ஒப்புவித்து விளைவுகளைச் சந்திக்க மனவிருப்பம் கொண்டிருக்க வில்லை.
3. எலியா ஒரு முன்மொழிதலை ஏற்படுத்துகிறார் (வசனங்கள் 22-24அ)!
   a. பாகால், இயற்கையின் கடவுளாக யூகிக்கப்பட்டிருந்தான் என்பதை நினைவில் வையுங்கள். சூரியனே அவனது அரியணை என்று யூகிக்கப்பட்டிருந்தது.

b. இது உண்மையாக இருந்திருந்தால், அக்கினியை அனுப்புதல் என்பது அவனுக்குப் பிள்ளை விளையாட்டாக இருந்திருக்க வேண்டும்.

4. மக்கள் ஒப்புக்கொள்கின்றனர் (வசனம் 24ஆ). NASB வேதாகமத்தில் "அது ஒரு நல்ல கருத்தாக உள்ளது" என்று இருக்கிறது.

V. ஒரு இறையியல் ரீதியான எதிர்கொள்ளுதல் (18:25-29)

A. முதன் முறையாக எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளிடத்தில் நேரடியாகப் பேசுகிறார் (வசனம் 25).

1. தாம் எடுத்துரைத்த முன்மொழிதல் நியாயமானதென்று அவர்கள் நினைக்கின்றனரா என்று அவர்களிடத்தில் அவர் கேட்கவில்லை; அவர்களுக்கு அவர் கட்டளை இடுகிறார்.

2. அவர்கள் அதைச் செய்ய வேண்டும் அல்லது முன்னதாகவே தங்கள் தோல்வியை மக்களுக்கு முன்பாக ஒப்புக்கொள்ளவேண்டும்.

B. 26 முதல் 29 வரையிலான வசனங்களில், வீணான மதத்தின் கூச்சல் மற்றும் வெறிபிடித்த கவலைக்குரிய காட்சியை நாம் கொண்டுள்ளோம்.

1. பலர் ஒரு காட்சி அல்லது வலிவு மற்றும் வலிவார்ந்த தன்மை யினால் மனம் ஈர்க்கப்படுகின்றனர். அடுத்த ஆறு அல்லது ஏழு மணி நேரங்களுக்குப் பாகாலின் தீர்க்கதரிசிகள் செயல் துடிப்பு நிறைந்தவர்களாக, மாபெரும் காட்சி ஒன்றை அரங்கேற்றுபவர்களாக இருப்பார்கள்!

2. எலியாவின் ஏளனம் (வசனம் 27) இருமடங்கு நோக்கம் கொண்டுள்ளது:

a. அவர் புறதெய்வ மதங்களின் பலவீனத்தைக் காண்பிக்கிறார்.

b. அவர் தீர்க்கதரிசிகளின் நடவடிக்கைகள் எவ்வளவு மதியீனமாக உள்ளன என்று சுட்டிக்காண்பிப்பதினால் வெகுஜனத்தின் வெறியில் பிடிபட்டு இருந்த மக்களை முந்திச் செயல்படுவதில் இருந்து தடுக்கிறார்.

VI. ஒரு தீர்மானமான எதிர்கொள்ளுதல் (18:30-35)

A. இப்போது எலியாவின் முறையாக உள்ளது. அவர் மக்களை ஒன்றுகூட்டி மீண்டும் அவர்களை எதிர்கொள்கிறார்.

B. தகர்த்துப் போடப்பட்டிருந்த யெகோவாவின் பலிபீடத்தை அவர் செப்பனிடுகிறார்.

C. அவர் பலியை ஆயத்தப்படுத்தி, சூழ்சிக்கு இடம் இல்லை என்று கருதப்படும் வரையில் அதைத் திரும்பத் திரும்பத் தண்ணீரால் நனைக்கிறார். (அருகில் இருந்த கடலில் நிறையத் தண்ணீர் இருக்கிறது.)

D. முடிவெடுக்கும் நேரத்திற்கென்று மக்களை அவர் ஆயத்தப்படுத்துகிறார்.

VII. ஒரு ஜெபம்நிறைந்த எதிர்கொள்ளுதல் (18:36-39)

A. எலியா மீண்டும் அவரது தேவன் முன்பாக இருக்கிறார். பாகாலின் தீர்க்கதரிசிகள் ஆறு அல்லது ஏழு மணி நேரம் ஊளையிட்டிருந்தனர். எலியாவின் எளிய ஜெபம் இரண்டு வசனங்களை மாத்திரம் எடுத்துக்கொள்கிறது (வசனங்கள் 36, 37).

B. வானத்தில் இருந்து அக்கினி இறங்கி வந்து பலியையும், கற்களையும், மண்ணையும் மற்றும் தண்ணீரையும் பட்சிக்கிறது (வசனம் 38)!

C. பல ஆண்டுகளில் முதல் முறையாக யெகோவாவினுடைய நாமம் மக்களின் உதடுகளில் உச்சரிக்கப்படுகிறது (வசனம் 39)!

VIII. ஒரு நடைமுறை எதிர்கொள்ளுதல் (18:40)

A. பாகாலின் தீர்க்கதரிசிகள் கொல்லப்படுகின்றனர்.

B. நாட்டில் ஆவிக்குரிய ஆபத்தான நிலைக்குத் தீவிரமான அறுவைச் சிகிக்கை தேவையாக உள்ளது: அது எல்லாவற்றையும் எடுத்து விடுங்கள்; எதையும் தவற விடாதீர்கள்!

முடிவுரை

A. இன்றைய நாட்களில் நாம் இன்னமும் மக்களின் அடிப்படைக் குழுக்கள் பலவற்றை நாம் கொண்டிருக்கிறோம்.

1. எலியாவைப் போன்றவர்கள்: தேவனுக்கும் அவரது சித்தத்தைச் செய்வதற்கும் தங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்கள்.

2. பாகாலின் தீர்க்கதரிசிகளைப் போன்றவர்கள்: பாவத்தில் கடினப்பட்டுப்போய், அநீதிக்கென்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

3. இஸ்ரவேல் மக்களைப் போன்றவர்கள்: பிரிவுபட்ட பற்றுறுதியுடன், ‘‘இரு நினைவுகளில் குந்திக் குந்தி நடப்பவர்கள்’’ (KJV).

B. நம்மை நாமே, இஸ்ரவேல் மக்களைப் போன்று மூன்றாவது குழுவில் இருப்பவர்களாகக் காணலாம். விஷயம் அவ்வாறு இருந்தால், இந்தப் பாடமானது நமக்கு ஒரு விசேஷித்த செய்தியைக் கொண்டுள்ளது.

1. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், நம்மைக் கர்த்தருக்கென்று முற்றிலுமாக அர்ப்பணிக்கும்படி நமது மனங்களில் முடிவு செய்தல் அவசியமாக உள்ளது!

2. நம்மை நம்பி இணங்கச் செய்வதற்கு வானத்தில் இருந்து அக்கினி எதுவும் வராது, ஆனால் தேவனுடைய வசனமானது அக்கினியைப் போன்றதாக உள்ளது (எரேமியா 5:14; 23:29); அது வல்லமை நிறைந்ததாக உள்ளது! ரோமர் 1:16ம் வசனம், சுவிசேஷத்தை ‘‘விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது’’ என்று கூறுகிறது.

3. இன்றைய நாட்களிலும் *அர்ப்பணிப்புள்ள* மக்களைத் தேவன் இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்!